# ரூ.67,378 கோடி திட்டங்களுக்கு அமைச்சர் அமித் ஷா அடிக்கல்

## முதல்வர் தலைமையில் நவ. 21-இல் விழா





சென்னை, நவ. 17:தமிழகத்தில் ரூ.67 ஆயிரத்து 378 கோடி மதிப்பிலான புதிய திட்டங்களுக்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா வரும் சனிக்கிழமை (நவ. 21) அடிக்கல் நாட்டுகிறார்.

சென்னை அருகே ரூ.380 கோடி மதிப்பிலான புதிய நீர்த் தேக்கத்தையும் அவர் தொடக்கி வைக்கிறார்.

இதுகுறித்து, தமிழக அரசு செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்தி:

திருவள்ளூர் மாவட்டம் தேர்வாய்கண்டிகையில் ரூ.380 கோடி மதிப்பில் புதிய நீர்த்தேக்கம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை மக்களின் பயன்பாட்டுக்காக மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா திறந்து வைக்கிறார்.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் சார்பில் ரூ.61 ஆயிரத்து 843 கோடி மதிப்பில் இரண்டாம்கட்டத்திட்டம்செயல்படுத்தப்பட உள்ளது. கோயம்புத்தூர் மாவட்டம் அவிநாசி சாலையில் ரூ.1,620 கோடி மதிப்பில் உயர்நிலை சாலைத் திட்டம், கரூர் மாவட்டம் நஞ்சை புகலூரில் ரூ.406 கோடியில்காவிரி ஆற்றின் குறுக்கே கதவணைத் திட்டம், ரூ.309 கோடியில் சென்னை வர்த்தக மையம் விரிவுபடுத்தும் திட்டம், இந்தியன் ஆயில் நிறுவனத்தின் சார்பில் வல்லூரில் ரூ.900 கோடியில் பெட்ரோலிய முனையம், அமுல்லைவாயலில் ரூ.1,400 கோடியில் உயவு எண்ணெய் ஆலை, காமராஜர் துறைமுகத்தில் ரூ.900 கோடியில் புதிய இறங்கு தளம் ஆகிய திட்டங்களுக்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அடிக்கல் நாட்டவுள்ளார்.

இதற்கான விழா சென்னை கலைவாணர் அரங்கத்தில் வரும் சனிக்கிழமை (நவ.21) மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது. விழாவுக்கு முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி தலைமை வகிக்கிறார். இதில், துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றுகிறார்.

தொழில் துறை அமைச்சர் எம்.சி. சம்பத் முன்னிலை வகிக்கிறார். தலைமைச் செயலாளர் க.சண்முகம் வரவேற்கிறார். தொழில் துறை முதன்மைச் செயலாளர் என்.முருகானந்தம் நன்றி தெரிவிக்கிறார்.